(இ) Twenty-five students are being supplied with mid-day meals on an average.

போலீஸ்காரர் மரணம்

* 310 கேள்வி—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் குடியரசுத் தலைவர் சென்னை வந்த சமயத்தில் பந்தோபஸ்து செய்துகொண்டிருந்த போலீஸ்காரர் ஒருவர் மரணமடைந்தது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) The death was due to heart failure.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்தப் பெரிய அதிகாரிகள் கனம் அமைச்சர்களைப் போலவும் மற்றும் பெரிய உத்தியோகஸ்தர்களைப் போலவும் —வரும்போதெல்லாம் பல மணி நேரம் வெய்யிலில் போலீஸ்காரர்களை நிற்க வைப்பதன் காரணமாக இப்படி இறந்துபோகிறார்களா ? அப்படி இனிமேலும் நிற்க வைக்காமல் செய்து சாதாரண முறையில் கனம் அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த உப-கேள்விக்கும் முக்கியமான கேள்விக்கும் சம்பந்தமில்லை. இந்தக் கேள்வி சம்பந்தப்பட்ட மட்டில் இறந்துபோன ஹெட் கான்ஸ்டபிள் ஜனாதிபதி எங்கு தங்கியிருந்தாரோ அங்குதான் செக்யூரிடி ட்யூட்டிக்கு போடப்பட்டிருந்தார். அவர் வேறு எங்கும் வெய்யிலில் நிற்கவில்லை.

கலெக்டர்கள் மாநாடு (1962)

* 311 கேள்வி—**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962–ல் மே மாதம் உதகையில் நடந்த கலெக்டர்களின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டனவா ?

(இ) அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) There was no conference of Collectors nor any resolutions were passed. On 9th May 1962, there was a Departmental meeting of the Rural Development and Local Administration Department with the Collectors to consider certain aspects of organisational patterns to be evolved for the Collectorates and Divisional Offices for looking after Panchayat Development work.

(இ) Does not arise.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார். இந்தக் கூட்டத்திலே என்னென்ன விவாதிக்கப்பட்டன ? நம் மாகாணத்தைப் பொறுத்த வரையில், டிபார்ட்மெண்டுகளை எப்படி சீர்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியும், ஜில்லாக்களைப் பிரிக்க வேண்டுமென்பதைப் பற்றியும் விவாதிக்கப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜில்லாக்களைப் பிரிக்கிற பிரச்னை வரவில்லை. பஞ்சாயத்து யூனியன்கள் நடைபெறுகிற விவரங்கள், அதில் ஏற்படுகிற பிரச்னைகள், குறைபாடுகள், மாற்று யோசனைகள் இதெல்லாம் தான் இந்த மகாநாட்டில் விவாதிக்கப்பட்டன. அதையெல்லாம் இங்கே விரிவாக எடுத்துக் கூறுவதற்கு இயலாது.

16th July 1962]

SRI C. CHIRANJEEVULU NAIDU : When the Panchayat Development Wing at the Collectorate will be set up and what will be the future of the local administration wing in the Collectorate?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question.

Asylum for beggars

* 312 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to set up an asylum for lodging beggars compulsorily?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. Sir.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், பிச்சைக்காரர்களுடைய உபத்திரவங்கள் நெருக்கடியான பஸ் நிலையங்கள் இன்னும் மற்ற இடங்கள் எல்லாவற்றிலும் இருப்பதை முன்னிட்டு இனியாவது இது மாதிரி ஒரு திட்டத்தை அமைக்க சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது சில ஸ்பெஷல் ஹோம்ஸ், பிச்சைக்காரர்கள் விடுதி, வொர்க் ஹௌஸஸ் இவைகளெல்லாம் இருக்கின்றன. முனிஸிபாலிடிகள் இவைகளை நடத்தி வருகின்றன. சென்னை நகரத்திலும், வேறு சில இடங்களிலும் இவைகள் நடைபெறுகின்றன. இங்கே பிச்சைக்காரர்களைச் சேர்த்து அவர்களுக்கு வேலை கொடுத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் கட்டாயமாக அவர்களைப் பிடித்து அடைக்க வேண்டும் என்ற உத்தேசம் இல்லை. ஆனால், பிச்சைக்காரர்கள் பற்றிய சட்டத்தை மாற்றி அமைக்கும் யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

Handloom cloth

கனம் சபாநாயகர் : 313 எண்ணுள்ள கேள்வியைக் கொடுத்த கனம் அங்கத்தினர் சபையில் இல்லாததால் கேள்வியும் அந்தக் பதிலும் சட்டசபையின் விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

* 313 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Handloom Weavers' Co-operative Societies for the speedy disposal of the surplus stocks with them, and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Madras State Handloom Weavers' Co-operative Society represented that there were stocks of handloom cloth worth Rs. 2·55 crores with State Society and the primary weavers' co-operative societies in this State. The Society applied for short term loan for marketing the stocks.

(*b*) The Government have sanctioned a loan of Rs. 15 lakhs to the Society for marketing the stocks.